**சென்னை–5, நிலஅளவை (ம) நிலவரித் திட்ட இயக்குநரகம்(நிலஅளவை பிரிவு), கூடுதல் இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**
**முன்னிலை : திரு.அ.கண்ணபிரான்**

ந.க.க2/6205/2024 நாள்:12.03.2024

பொருள் : பணிவரன்முறை – நிலஅளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்ககம்(நிலஅளவை பிரிவு) – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர்களாக நியமனம் செய்து உத்தரவிடப்பட்டது – பணிவரன்முறை செய்து ஆணையிடல் – தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை(நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ–1) துறை நாள்:08.03.2023.
2. மனிதவள மேலான்மைத் துறை கடிதம் எண்:5532/G2/2023–1, நாள்:20.09.2023.
3. இயக்கக செயல்முறை ஆணை ந.க.ர1/ 23581/2019(நி.அ), நாள் 22.06.2022.
4. இயக்கக செயல்முறை ஆணை ந.க.ர1/ 7257/2022(நி.அ), நாள் 26.06.2023.
5. இயக்கக செயல்முறை ஆணை ந.க.ர1/ 31877/2022(நி.அ), நாள் 26.06.2023.
6. செல்வி.மு.முத்தமிழ்செல்வி பணியேற்பு அறிக்கை நாள் 24.06.2022.
7. திரு.கி.சரவணகுமார் பணியேற்பு அறிக்கை நாள் 26.06.2023.
8. திரு.சு.விவேக் பணியேற்பு அறிக்கை நாள் 26.06.2023.
9. அரசுக்கடிதம்(1டி) எண்:64, பணிகள் அலகு பணி–9(2) பிரிவு, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறை நாள்:18.01.2024.

*******

<u>ஆணை:–</u>

பார்வை 3 முதல் 5 முடிய உள்ள இயக்கக செயல்முறை ஆணைகளில், செல்வி.மு.முத்தமிழ்செல்வி, திரு.கி.சரவணகுமார் மற்றும் திரு.சு.விவேக் ஆகியோருக்கு நிலஅளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்ககத்தில்(நிலஅளவை பிரவு) கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர்களாக பணி நியமனம் வழங்கி உத்தரவிடப்பட்டது.

தனியர்கள் முறையே 24.06.2022 முற்பகல், 26.06.2023 முற்பகல் மற்றும் 26.06.2023 முற்பகல் நிலஅளவை பிரிவில் இளநிலை உதவியாளர்களாக பணியேற்றுள்ளனர். இவர்கள் விதிகளின்படி இளநிலை உதவியாளர்களாக பணியேற்ற நாளில் உரிய வயது / கல்வித்தகுதியினை பெற்றுள்ளனர்.

காலஞ்சென்ற அரசு பணியாளர்களின் வாரிசுதாரர்கள் கருணை அடிப்படையில் நியமனம் பெற்ற நேர்வில் பணிவரன்முறை செய்வது தொடர்பாக, அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ-1) துறை, நாள்:08.03.2023-ல் வகுக்கப்பட்ட தமிழ்நாடு குடிமைப்பணிகள்(கருணை அடிப்படையில் நியமனம்) விதிகள், 2023 மற்றும் மனித வள மேலாண்மைத் (G2) துறையின் தெளிவுரைக் கடிதம் எண்.5532/G2/2023-1, நாள்.20.09.2023-ல் உள்ள வழிகாட்டுதல்களின்படி செயல்பட பார்வை 6-ல் காணும் அரசுக் கடிதத்தில் உத்தரவிடப்பட்டுள்ளது.

எனவே, இயக்கக நிலஅளவை பிரிவில் பணிபுரிந்து வரும் பட்டியலில் கலம் 2-ல் குறிப்பிடப்பட்டுள்ள இளநிலை உதவியாளர்களுக்கு, அவர்கள் இளநிலை உதவியாளர்களாக பணியேற்ற தேதி முதல் கலம் 4-ல் கண்டவாறு பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

| வ.எண் | இளநிலை உதவியாளர் பெயர் | பணியேற்ற நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1. | திருமதி.மு.முத்தமிழ்செல்வி | 24.06.2022 முற்பகல் | 24.06.2022 முற்பகல் |
| 2. | திரு.கி.சரவணகுமார் | 26.06.2023 முற்பகல் | 26.06.2023 முற்பகல் |
| 3. | திரு.சு.விவேக் | 26.06.2023 முற்பகல் | 26.06.2023 முற்பகல் |

பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் தனியர்களது இரண்டாண்டு தகுதிகாண் பருவ காலம் கணக்கிடப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது,

(ஒம்/--)அ.கண்ணபிரான்,
கூடுதல் இயக்குநர்,

பெறுநர் :

1. திருமதி.மு.முத்தமிழ்செல்வி. இளநிலை உதவியாளர்.
   (கண்காணிப்பாளர் மூலமாக)

2. திரு.கி.சரவணகுமார், இளநிலை உதவியாளர்.
   (கண்காணிப்பாளர் மூலமாக)

3. திரு.சு.விவேக், இளநிலை உதவியாளர்.
   (கண்காணிப்பாளர் மூலமாக)

நகல் : "ர" கண்காணிப்பாளர்.

நகல் : "ர1" / "க2" இருக்கை.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

13.03.24
கண்காணிப்பாளர்
13032024